

# புண்ணிய தீர்த்தம் தொட்டு...

# வண்ணத்தில் வழிபாடு!

**உருகுகிறார் ஓவியப் பெண்மணி**

**“தெரிஞ்சவங்க யாராவது காசி- ராமேஸ்வரம்னு போனாங்கன்னா, அவங்ககிட்ட நான் வைக்கிற கோரிக்கை ஒண்ணே ஒண்ணுதான்... அங்கேருந்து தீர்த்தம் எடுத்துட்டு வந்து கொடுங்கன்னு கேட்டுக்குவேன். ஏன்னா... அந்தத் தீர்த்தத்துலதான் வண்ணங்களைக் குழைச்சு, கடவுளர் திருவுருவங்களை வரையறேன்” என்று மனமுருகிச் சொல்கிறார் பூமாதேவி.**

சென்னை- தி.நகர் சௌத் வெஸ்ட் போக் ரோட்டில் உள்ள இவரது அலுவலகத்தில் நுழைந்தால், ஸ்ரீநடராஜர், ஸ்ரீவேங்கடாசலபதி, ஸ்ரீஆண்டாள் என சகல தெய்வங்களையும் தரிசிக்கலாம். அத்தனைத் தெய்வங்களும் பூமாதேவியின் தூரிகையால், புன்முறுவல் பூக்கின்றனர்; நடனமாடுகின்றனர்; பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர்!

“கோயில் நகரம் கும்பகோணம்தான் நான் பிறந்த ஊர். ராமசாமி கோயில், சிதம்பரம், தஞ்சை பெரியகோயில்னு போயிட்டு வந்தா, அங்கே... கருவறையில் நான் பார்த்த தெய்வங்களெல்லாம் கண்ணுக்கு முன்னாடி அப்படியே நிக்கிற மாதிரி இருக்கும். இந்த நினைப்பிலேயே ஆழ்ந்து நான் வரைஞ்ச படங்களைப் பார்த்துட்டு, வீடே பாராட்டும். அப்புறம்... சென்னைக்கு வந்து, படிச்சு, ஓவியப் பயிற்சியும் எடுத்துக்கிட்டு, முழு நேர ஓவியர்னு பேரும் எடுத்தாச்சு. ஆனா, சின்ன வயசுல நான் பார்த்த கோயில்களும், கடவுளர் திருமேனிகளும்தான் இன்னிக்கி வரைக்கும் என்னைக் கைப்பிடிச்சுக் கூட்டிட்டுப் போயிட்டிருக்கு” எனச் சிலிர்ப்புடன் சொல்கிறார் பூமா.









“தூரிகையை எடுத்து வரைய ஆரம்பிச்சா, அதுல அப்படியே மூழ்கிருவேன். அதிலேயும் ஸ்வாமி படங்களை வரைய உட்கார்ந்துட்டா, அவ்வளவுதான்... சாப்பாடு, தூக்கம்னு எல்லாம் மறந்து போயிடும். மனசு மொத்தத்தையும் கடவுள்கிட்ட கொடுத்துட்டாப் போதும்... கையும் பிரஷ்ஷும் சாமிக்குக் கட்டுப்பட்டு வேலை செய்யும்; படமும் அற்புதமா அமைஞ்சுடும்!” என்றவர் தான் வரைந்த படங்கள் குறித்து விவரித்தார்.

“லைன் டிராயிங், வாட்டர் கலர், போஸ்டல் கலர்னு ஓவியங்கள்ல வெரைட்டி உண்டு. அத்தனையும் எனக்கு அத்துப்படி! ஆனா, எந்த உலகத்துல இருக்கோம்னு தெரியாம மூழ்கிப் போயிடறது, தஞ்சாவூர் பெயின்ட்டிங் பண்ணும்போதுதான்! ராத்திரி, பகலா வேலை நடக்கும்; தோள்பட்டையும் முதுகுத்தண்டும் வலியில என்கிட்ட கெஞ்சும். எதையும் பொருட்படுத்தமாட்டேன். ஓவியத்தை முடிச்சுட்டு, அதைச் சுத்திலும் தங்கப் பளபளப்புகளை ஒட்டி, இன்னும் இன்னும்னு சின்னச் சின்னதா நகாசு வேலைகளைப் பண்ணி முடிச்சாத்தான் நிம்மதி, எனக்கு! படத்தைப் பாத்துட்டு, ‘திருப்பதி ஏழுமலையானே இங்கே வந்துட்டார்டி’ன்னு அம்மா பாராட்டுவாங்க. அவ்ளோதான்... மொத்த வலியும் இருந்த இடம் தெரியாம ஓடிப் போயிடும்!” என்று சொல்லும் பூமா, கிட்டத்தட்ட 200 வகை பெயின்ட்டிங் வேலைகளையும் செய்வாராம்!

“பரிசுப் பொருட்கள், வளையல், வாட்ச், பர்ஸ், கலைப்பொருட்கள்னு எல்லாத்துலயும் ஏதாவது வரைவேன். சுடிதார், புடவை, தலையணை உறை, குழந்தைகள் உடைகள்னு ‘சம்க்கி’ வேலைகள் செய்வேன். ஆனாலும், தஞ்சாவூர் பெயின்ட்டிங்ஸ் வரையறதுலதான் ஈடுபாடு எனக்கு! ஸ்ரீவிநாயகர், ஸ்ரீநடராஜர், ஸ்ரீபெருமாள், ஸ்ரீஆண்டாள், ஸ்ரீஅன்னபூரணின்னு பல தெய்வங்களை வரைஞ்சிருக்கேன்” என்கிறார் பூமா. ஓவிய நண்பரும் குருவுமான மருதவாணனுடன் சேர்ந்து ‘ஓவியாஸ் ஆர்ட்ஸ் அண்ட் அகாடமி’ எனும் கலைக்கூடம் வைத்திருக்கிறாராம்!



பூமாவின் ஸ்வாமி ஓவியங்களைப் பார்த்து விட்டு கனடா, லண்டன், ஜெர்மனி ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்கள், அவற்றை விரும்பி வாங்கிச் செல்கின்றனராம். அது மட்டுமா?! இவரது பயிற்சி வகுப்பிலும் கலந்துகொள்கின்றனர். பாடகி அனிதா குப்புசாமி, அமைச்சர்கள், அப்பாசாமி பில்டர்ஸ் எனப் பலரும் இவரின் ஓவியங்களை வாங்கி, தங்கள் வரவேற்பறையில் மாட்டி வைத்துள்ளனராம்!

“இறை பக்திங்கறது தொட்டில் பழக்கம். திருப்பாவை பாடி, மார்கழியில் விரதமிருந்து பூஜை செய்யறவ நான். ஓவியங்களைப் பார்க்கிறவங்க, திறமைசாலினு பாராட்டுறாங்க. ஆனா, என்னைப் பொறுத்தவரை... ஓவியம் வரைதல் என்பது என்னோட ஆழ்ந்த பக்தியின் வெளிப்பாடு. கடவுளுக்கு நான் செய்ற பூஜை இது!”- கண்கள் மூடி, பரவசத்துடன் சொல்கிறார் ஓவியர் பூமா!



- க.நாகப்பன்
படங்கள்: து.மாரியப்பன்